# இதழின் உள்ளே ....


1. மனம் விட்டு உங்களோடு 2
2. துதியுங்கள் 3
3. ஜெபியுங்கள் 4
4. கர்த்தர் வெறுக்கும் காரியங்கள் 5
5. லெந்து கால கூட்ட அட்டவணை 6
6. ஆசிரியர் வாழ்வில் ஒர்நாள் 7
7. கரிசனை உள்ள ஆண்டவர் 8
8. பிரசங்க குறிப்பு 14
9. மகிழ்ச்சியான குடும்பம் 15
10. உள்ளத்தில் பிறந்த இயேசு 17
11. யார் துன்மார்க்கன் 19
12. தாழ்மையின் சின்னங்கள் 21
13. சுமக்கிற தேவன் 22
14. கிறிஸ்துவுக்காக வாழ்ந்தவர்கள் 26
15. ஜாக்கிரதையாயிருங்கள் 27
16. சில மனிதர்களிடமிருந்து ... 29




# மனம் விட்டு உங்களோடு....



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

சர்வ வல்லவரும், சர்வ மகிமை பொருந்தினவரும், சர்வ ஞானமுள்ளவரும், சகல அதிகாரம் படைத்தவருமாகிய உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் இன்ப நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் ரொகள்கிறேன்.

இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய இயேசுகிறிஸ்துவுக்கே மகிமை உண்டாவதாக.

குறிப்பிட்ட இடைவெளியில் இந்த வெளியீடு வருவதற்கு கர்த்தர் கொடுத்த கிருபைகாக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

தொலைக்காட்சி ஊழியங்கள் சிறப்பாக நடைபெறுவதற்கு கர்த்தர் உதவி செய்து வருகிறார். அநேகர் தொலைக்காட்சி செய்தியை கேட்டு என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொள்கிறார்கள். அநேகருக்கு பயனுள்ள செய்திகளாக இருந்து வருவதை எண்ணித் தேவனைத் துதிக்கிறேன்.

கடந்த நாட்களில் மாஞ்சோலை, நாலுமுக்கு, ஊத்து எஸ்டேட்களில் இறைபணி செய்யும் வாய்ப்பைக் கொடுத்தார். அங்குள்ள மக்கள் ஆண்டவர் மீது வைத்திருக்கும் வாஞ்சைக்காக ஆண்டவரைத் துதிக்கிறேன்.

நமது பத்திரிக்கை வெளியீடுகள் பலருக்கு பயன் உள்ளதாக இருப்பதை நினைத்து ஆண்டவரைத் துதிக்கிறேன்.

ஜனங்கள் வேத வசனங்களை நன்கு புரிந்து கொள்ளவும், அவைகளை நமது வாழ்க்கையில் அனுபவிக்கவும் வேண்டும் என்பது தான் மிகப் பெரிய நோக்கம். வேத வசனங்களை வியாக்கியானம் பண்ணி நான் வேத அறிவுள்ளவன் என்பதை காட்டுவதைவிட வேத வசனத்தை அனுபவித்து அவைகளால் உருவாக்கப்பட்டு கூறுவதே (Practical Message) முக்கியமானது என்பதை ஆண்டவர் உணர்த்தி வருகிறார்.

வேத வசனத்தின் மூலம் பல்வேறு நிலைகளில் உருவாக்கப்படுவதற்கும் கர்த்தர் உதவி செய்து வருகிறார்.

தொடர்ந்து ஊழியங்கள் உண்டு. தொலைக்காட்சி, பத்திரிக்கை வெளியீடு, பாடல், இசை, இணையதளம், எளியோர்க்கு உதவுதல், கன்வென்ஷன் போன்ற ஊழியங்களில் கர்த்தர் பயன்படுத்திவருகிறார்.

கிறிஸ்துவின் வருகை வரை அல்லது எனக்கு ஆண்டவர் கொடுக்கும் ஜீவன் வரை பரிசுத்தத்திலும், உண்மையிலும் நீதியிலும் நிலைத்திருக்க ஜெபியுங்கள்.

தேவ சமாதானம் நம்மோடு இருப்பதாக.

# துதியுங்கள்

பல வகையான நெருக்கமான சூழ்நிலையிலும் கர்த்தரை முழுமையாக சார்ந்து கொண்டு எந்தமனிதனுக்கும், எந்த அதிகாரத்திற்கும், எந்த வல்லமைக்கும் அடிமையாகாமல் காத்து வருவதற்காக துதியுங்கள்.

இவ்வுலக வாழ்வில் எவ்வளவுதான் வசதிகள் பெருகினாலும், எவ்வளவு தான் வருமானங்கள் கூடினாலும், உல்லாசமாக வாழக் கூடிய நிலைகள் வந்தாலும் கர்த்தருடைய உறவை விட்டு விலகாமல் காத்து வருவதற்காக துதியுங்கள்.

கவலைப்பட்ட அல்லது கவலைப்படுகிற காரியங்கள் எல்லாம் வீண் என்று சொல்லக் கூடிய அளவில் கர்த்தர் அவற்றை மாற்றி அமைத்ததற்காகத் துதியுங்கள்.

பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகளின் வேலைவாய்ப்பு, பிள்ளைகளின் திருமணவாழ்க்கை போன்ற அனைத்துக் காரியத்திலும் கர்த்தர் அந்தந்த காரியங்களை அந்தந்த நேரத்தில் செய்து வருவதற்காக துதியுங்கள்.

மருத்துவக் கணிப்புப்படி நம்மைக் குறித்து காட்டுகிற அளவுகள் (Sugar, salt, cholestral) போன்றவை அளவுக்கு அதிகமாக இருந்தாலும் மருத்துவர்கள் ஆச்சரியப்படக்கூடிய அளவிற்கு ஆண்டவர் நம்மை பராமரித்தும் பாதுகாத்தும் வருவதற்காகத் துதியுங்கள்.

வேத வசனத்தின் மூலம் வாழ்வு பெறுவதற்கும், வேத வசனம் என்ன சொல்லுகிறதோ அதுதான் நிலைத்திருக்கும் என்கிற நம்பிக்கையிலும் வேத வசனங்களுக்கு ஒத்துவராத காரியங்களை செய்வதற்கு இடங்கொடுக்காத நல்ல எண்ணங்களுக்காகத் துதியுங்கள்.

பிரச்சனையின் நேரத்திலும் பிரச்சனையைப் பற்றியே பேசாதபடி, பிரச்சனைக்கு காரணமானவர்களை குறைகூறாதபடி, நாம் சந்திக்கிற பிரச்சனையைக் காட்டிலும் நம் தேவன் பெரியவர் என்ற எண்ணத்திலும், அந்தரங்கங்களை அறிந்த ஆண்டவர் நமக்கு உண்டு என்ற தைரியத்தையும் கொடுத்து பிரச்சனையை உதறிப் போடும் அனுபவத்தைக் கொடுத்து வரும் கிருபைக்காகத் துதியுங்கள்.

நல்ல தட்பவெப்பநிலையுள்ள நல்ல தேசத்தில் குடியிருக்கக் கூடிய கிருபைக்காகவும் நன்றாக ஆளுகை செய்யும் அனைத்து அரசியல் மற்றும் அதிகாரத்திற்காகவும் கர்த்தரைத் துதியுங்கள்.

கிறிஸ்துவை புதிதாக ஏற்றுக் கொண்டு வருவதற்காகவும், மெய்தேவனாம் கிறிஸ்துவை ஜனங்கள் அறிந்து வருவதற்காகவும், அவருக்காக எதையும் செய்வதற்கு துடித்துக் கொண்டிருக்கும் வாலிபர் எழும்பி வருகிறதற்காகவும் கர்த்தரைத் துதியுங்கள்.

கர்த்தருடைய பணியை செய்யத்தான் கர்த்தர் நம்மை அழைத்திருக்கிறார் என்பதை மறந்து நிர்விசாரமாக அலையும் அநேக ஊழியர்கள் மத்தியில் ஆண்டவருக்காக எதையாவது செய்ய வேண்டும் என்று எழும்பி வருகிற ‘லே’ மக்களுக்காகவும் சுயாதீன சபை ஊழியர்களுக்காகவும், கர்த்தரைத் துதியுங்கள்.





# ஜெபியுங்கள்

உலகம் உங்களை பகைக்கும் என்ற வசனத்தின்படி ஆண்டவரை உண்மையாக ஏற்றுக் கொண்டும் அவருக்கு அடிமையாக வாழும் மக்களுக்கு விரோதமாக வரும் பொய்குற்றச் சாட்டுகள் மற்றும் பல நெருக்கத்தில் இருந்து கர்த்தர் அவர்களை காக்க வேண்டும் என்பதற்காக ஜெபியுங்கள்.

சாத்தானுடைய நேரடி குறியாக இருந்து பல சந்தர்ப்பங்களை பயன்படுத்தி உண்மையான ஊழியர்களை தாக்குவதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கும் பொல்லாங்கனுடைய குறியிலிருந்து உண்மையான ஊழியர்களை கர்த்தர் காத்துக் கொள்ளும்படி ஜெபியுங்கள்.

நல்ல மழையை கர்த்தர் நமக்கு தந்து நமது தேசங்கள், கிராமங்கள், ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

சூழ்நிலையினால் என்னுடைய பிள்ளைகள் கெட்டுப் போனார்கள் என்கிற நிலை வராதபடி எந்த சூழ்நிலைகளிலும் நமது பிள்ளைகள் படித்தாலும், வேலைப்பார்த்தாலும் கர்த்தருடைய செட்டைகளால் அவர்கள் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.

திருமணமான பிள்ளைகளை சுதந்தரமாக வாழ இடங்கொடுக்காமல் அவர்களுக்கு துர்ஆலோசனைக் கொடுத்து தன்வயப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படும் பெற்றோர்களுக்காக ஜெபியுங்கள்.

நாங்கள் ஆண்கள் ஐக்கிய சங்கத்தில் முக்கியமானவர்கள் அல்லது எங்களால்தான் ஆண்கள் ஐக்கிய சங்கமே நடக்கிறது அல்லது நான்தான் முக்கிய ஆலோசகர் என்று கூறிகொண்டு வாய்ப்புகள் வரும்போது அசிங்கமான வார்த்தைகளை பேசுவதும், சினிமாவிற்கும், புகைபழக்கவழக்கத்திற்கும் மற்றும் போதை பொருட்களுக்கும் அடிமையாக இருக்கின்ற ஆண்கள் ஐக்கிய சங்க உறுப்பினர்கள் கர்த்தருக்கு பயந்தவர்களாக மாற ஜெபியுங்கள்.

பணம் சம்பாதிப்பதற்கு இறைபணியும் ஒரு வழிதான் என்று இறைபணிக்கு வந்திருக்கிற ஊழியர்கள் ஒவ்வொருவரும் மனமாற ஜெபியுங்கள்.


ஒவ்வொரு மாதமும் சிலகுறிப்பிட்ட நாட்களில் சுயாதீன ஊழியம் செய்கிற அநேகர் குடுகுடுப்பைக்காரர்கள் போன்று ஜனங்களின் காணிக்கையை மட்டுமே குறிவைத்து வீடு சந்திக்கிற ஊழியர்களுக்காக ஜெபியுங்கள். ஊழியத்தை கர்த்தர் கொடுத்தால் தேவைகளை அவரே சந்திப்பார். ஆதாமையும், ஏவாளையும் உருவாக்கும்முன் அவர்கள் ஆளுவதற்கும், அனுபவிப்பதற்கும் அனைத்துக் காரியங்களையும் உண்டு

பண்ணி வைத்தவர் நமது தேவன் அல்லவா என்கிற எண்ணங்களை அவர்கள் பெற்றுக் கொள்ள ஜெபியுங்கள்.

- வியாதிக்கும், கடனுக்கும், பல போதைகளுக்கும் அடிமையாய் இருக்கிற ஜனங்கள் மீட்கப்பட ஜெபியுங்கள். என்றோ நம்மை மீட்ட ஆண்டவர் அவர்களும் மீட்கப்பட ஜெபியுங்கள்.
- திருமண வாழ்வில் இணைந்து குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிற கணவன், மனைவி இருவரும் ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளவும், ஒரிவரிலொருவர் அன்பாயிருக்கவும் அவர்களது அன்புக்கிடையில் வேறெந்த அன்புக்கும் இடம் இல்லாமல் பார்த்துக் கொள்ளவும் ஜெபியுங்கள்.

குடும்ப வாழ்வு கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்று என்பதை புரிந்து கொள்ளவும் திருமண ஆராதனையில் கொடுத்த வாக்குறுதியை அடிக்கடி நினைத்துப் பார்க்கவும் ஜெபியுங்கள்.

## கர்த்தர் வெறுக்கும் காரியங்கள்






**2014ம் ஆண்டின் சகோதரன் கலந்து கொள்ளும் லெந்து காலக் கூட்டத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்**

| வ.எண் | நாள் | கிழமை | இடம் | ஆலயம் |
|---|---|---|---|---|
| 1 | மார்ச் 7,8,9 | வெள்ளி,சனி,ஞாயிறு | விருதுநகர் | C.S.I ஆலயம் |
| 2 | மார்ச் 14,15,16 | வெள்ளி,சனி,ஞாயிறு | கோவை,சோமனூர் | C.S.I ஆலயம் |
| 3 | மார்ச் 21,22,23 | வெள்ளி,சனி,ஞாயிறு | ஏழாயிரம்பண்ணை | C.S.I ஆலயம் |
| 4 | மார்ச் 28,29,30 | வெள்ளி,சனி,ஞாயிறு | அருப்புக்கோட்டை | C.S.I ஆலயம் |
| 5 | ஏப்ரல் 4,5,6 | வெள்ளி,சனி,ஞாயிறு | சிவகாசி | C.S.I ராக்லண்ட் ஆலயம் |
| 6 | ஏப்ரல் 11,12,13 | வெள்ளி,சனி,ஞாயிறு | சாத்தூர் | C.S.I ஆலயம் |
| 7 | ஏப்ரல் 18 | பெரிய வெள்ளி | கொடைரோடு | C.S.I ஆலயம் |

**இவைகளைத் தவிர மற்ற வாரங்களிலும் கூட்டங்கள் உண்டு**

## உங்கள் கவனத்திற்கு

இந்திய நேரப்படி தினந்தோறும் மாலை 6.30–மணி முதல் 7.00 மணி வரை www.cktv.in என்ற web Tv–யிலும்

திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 8.00மணிமுதல் 8.30 மணி வரை www.livingjesus.tv என்ற web Tv–யிலும்

புதன்தோறும் இரவு 9.00 மணி முதல் 9.30 மணி வரை www.jtktv.org என்ற web Tv–யிலும்

சகோதரனின் செய்தியை பார்த்து பயனடையுங்கள்

எமது விலாசம்
**Evg.J.மெல்கிசேதேக்**
116, வார்த்தையே வாழ்வு ஊழியங்கள்
மூன்றடைப்பு (P.O) – 627152
திருநெல்வேலி மாவட்டம்
போன்: 0462 257230
செல்: 94436 14676, 94421 57230

**துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்கு கிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்**
நீதி.17:15

# ஆசிரியர் வாழ்வில் ஓர்நாள்



ஒரு கன்வென்ஷன் கூட்டத்திற்கு சென்றுவந்த கணவரும் மனைவியும் இப்படிப்பேசிக் கொண்டார்கள்.

அந்த கூட்டத்தில் ஆராதனை வேளையில் அநேகர் அந்நிய பாஷை பேசி கைத்தட்டிக் கொண்டும், உருண்டு கொண்டும் உடலை அசைத்துக் கொண்டும், அல்லேலூயா தோத்திரம் என்கிற சத்தம் அதிகமாக கேட்கப்பட்டுக் கொண்டும் இருந்தது.

இதை மனைவியானவளும் நன்கு கவனித்தாள். வீட்டிற்கு வந்தவுடன் மனைவியினிடத்தில் உனக்கு இப்படிப்பட்ட அபிஷேகம் பெற வேண்டும் என்கிற ஆவல் உண்டா என்று கேட்டார். இருவரும் ஆண்டவருக்கு பயந்தவர்கள் பல வகையான ஊழியங்கள் நடைபெற காரணமாக இருப்பவர்கள்.

கணவர் இப்படிக் கேட்டவுடனே மனைவியானவள் கூறியதாவது எனக்கும் ஆசை உண்டு ஆனால் ஆராதனையில் துள்ளிக்குதிக்கிறவர்கள் வீட்டிலும் கணவருக்கு அடங்காதவர்களாகவும், குழாயடிச் சண்டையில் தீவிரவாதிகளாகவும், சிறிய காரியங்களுக்கும் விட்டுக்கொடாதவர்களாகவும், சிறிய விஷயத்தையும் பெரிதாக மாற்றுகிறவர்களுமாய் இருக்கிறார்களே. வாழ்க்கையிலும், வார்த்தையிலும் எந்த மாற்றத்தையும் காண முடியாமல் வெறும் ஆட்டம் மட்டும் ஆராதனையில் ஆடித் தொலைக்கின்ற இந்த அபிஷேகம் தேவை தானா என்ற எண்ணமே எனக்கு தோன்றுகிறது என்று கூறினார்களாம். எத்தனை உண்மை.

ஆராதனையில் தங்களை ஆவிக்குரியவர்கள் அல்லது அபிஷேகம் பெற்றுக் கொண்டவர்கள் என்கிற வேகம் வீட்டில் காண முடிவதில்லையே.

ஒருநாள் ஒரு சகோதரி பக்கத்து வீட்டு குடும்பத்தோடு ஆக்ரோஷமான சண்டையிட்டுக் கொண்டிருந்தாளாம். எவ்வளவு தூரத்திற்கு வாய் கிழிய பேச முடியுமோ அவ்வளவு தூரத்திற்கு ஏசிக் கொண்டு இருந்தாளாம். அந்நேரத்தில் திடீரென தொலைபேசி ஒலிக்க தொலைப்பேசியின் சத்தத்தைக் கேட்டு Praise the Lord Paster என்று கூறி மிக நேர்த்தியாக பேசிக் கொண்டு தான் ஆத்தும ஆதாய பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதைப் பற்றியும் பேசி தொலைப்பேசியை வைத்தபின் அவளது சண்டை தொடர்ந்ததாம். இப்படிப்பட்டவர்கள் ஆராதனை துள்ளல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களே.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, உங்களின் சாட்சியில்லா துள்ளல்கள் எவ்வளவு பேருக்கு இடறல் உண்டு பண்ணி விடுகிறது என்பதை கவனியுங்கள்.

தேவ ஆவியானவரின் நிறைவு என்பது ஒரு உன்னத அனுபவம் அதை மற்றவர்கள் பரிகசிக்க இடம் கொடாதிருங்கள்.



சகோ.J.**மெல்கிசேதேக்**, மூன்றடைப்பு

# கரிசனை உள்ள ஆண்டவர்

நமது ஆண்டவரைப் போல கரிசனை உள்ளவர்கள் யாரும் இருக்க முடியாது. பெற்றோர் தனது பிள்ளைகளிடம் காட்டும் கரிசனையை விட, மனைவி தனது கணவனிடத்திலும், கணவன் தனது மனைவியினிடத்திலும் பிள்ளைகள் தனது உடன்பிறப்புகள் மற்றும் பெற்றோருக்கு காட்டும் கரிசனையை விட நம் ஆண்டவரின் கரிசனை மிக மிக உன்னதமானது. எனவே, அவர் எதிலெல்லாம் கரிசனை உள்ளவராய் இருக்கிறார் என்பதை இச்செய்தி மூலம் தெரிந்து கொண்டு அவரது கரிசனையை பெற்றவர்களாக வாழக் கர்த்தர் கிருபைச் செய்வாராக.

## I. ஆண்டவர் அவரது பிள்ளைகளை பராமரிப்பதில் கரிசனை உள்ளவர்.

**ஆதி.45:5 என்னை இவ்விடத்தில் வரும்படி விற்று போட்டதினால், நீங்கள் சஞ்சலப் படவேண்டாம். அது உங்களுக்கு விசனமாய் இருக்கவும் வேண்டாம், ஜீவ ரட்சனை செய்யும் படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்.**

யாக்கோபுடைய குடும்பம் இஸ்ரவேல் குடும்பம் ஆண்டவர் தனக்கு என்று தெரிந்து கொண்ட குடும்பம் அந்த குடும்பம் எந்நாட்களிலும் போஷிக்கப் படவேண்டும் என்று தேவன் அவர்கள் மீது கரிசனையாக இருந்து

ஆதி.37:1ன் படி கானான் தேசத்தில் குடியிருந்த இஸ்ரவேல் குடும்பத்திற்கு ஆதி.41:54ல் கூறப்பட்டபடி பஞ்சம் உண்டாயிருந்தபடியால் எகிப்திலே தானியம் உண்டென்று யாக்கோபு அறிந்து அங்கேபோய் தானியங்கொள்வதற்காக யாக்கோபு தனது பிள்ளைகளை அனுப்புகிறார் (ஆதி.42:2,3) அந்த எகிப்திலே அவர்களது சொந்த உடன்பிறப்பான யோசேப்பு ஒரு பெரிய அதிகாரியாக இருப்பான் என்று அவர்களுக்குத் தெரியாது.

ஆண்டவர் யோசேப்புக்கு சில சொப்பனங்களைக் காட்டினார். அதை மற்ற சகோதரர்களுக்கும், பெற்றோருக்கும் கூறினபடியால் சகோதரர்களின் பொறாமையால் யோசேப்பு பல பாடுகளுக்கு உட்படலானார். குழிக்குள் கிடந்தான். அந்நியரிடத்தில் விற்கப்பட்டான். செய்யாத தவறை செய்ததாக அவருக்கு சிறை தண்டனை சிறைச்சாலையில் இவரால் உதவிபெற்றவனும் உதவி கிடைத்தவுடன் மறத்தல் போன்ற அநேக கொடுமைகள், யோசேப்புக்கு வந்தாலும், அவர் முறுமுறுக்கவில்லை. ஆதி42.9ன் படி தனக்கு ஆண்டவர் கொடுத்த சொப்பனங்களை நினைத்துக் கொண்டு இருந்தான். இகழ்வான நிலை வந்தாலும் பரிசுத்தத்தை இழக்க வில்லை. தேவனைப் பற்றி குறை சொல்லவில்லை. தேவன் அவனை எகிப்திற்கு அதிபதியாக உயர்த்தினார். தான் அதிகாரியாக இருக்கும் தேசத்தை நோக்கி தன் மீதுள்ள பொறாமையால் தனக்கு துரோகம் செய்த தனது

> கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுவது என்பது வேறு கிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்டு அவரது விருப்பப்படி, அவரது வசனத்தின் அடிப்படையில் அவரை பின் பற்றவது என்பது வேறு

சகோதரரிடத்தில் அவர் கூறும்போது கோபப்படாதீர்கள் நம் குடும்பத்தை போஷிப்பதற்காக ஆண்டவர் முன்னே என்னை அனுப்பினார் என்று கூறுகிறார். **அப்படியானால் ஆண்டவர் அவரது பிள்ளைகள் எல்லா நிலைகளிலும், அடிப்படை வசதியோடு (உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இல்லம்) வாழ ஆண்டவர் கரிசனை உள்ளவராய் இருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள முடியும்.**

2. இஸ்ரவேல் ஜனங்கள் வேலையே செய்யாமல் மன்னா என்னும் உணவால் போஷிக்கப்பட்டார்கள்.

3. 1இரா.17ல் கேரீத் ஆற்றில் ஒளித்துக் கொள் என்று கூறின ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்படிந்த எலியா தீர்க்கதரிசியை 1இரா.17:6ன் படி "காகங்கள் அவனுக்கு விடியற்காலத்தில் அப்பமும் இறைச்சியும், சாயங்காலத்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டு வந்தது".

இப்படி போஷிக்கிற ஆண்டவர் நமக்கும் உண்டு.

4. யோ.6:12ன் படி தம்மை தேடி வந்தவர்களுக்கு நேர்த்தியான உணவு கொடுத்தாரே

அதே ஆண்டவர் இன்றும் ஜீவனுள்ளவராய் இருக்கிறார். நமக்கும் அந்த போஷிப்பு வேண்டுமெனில் அவரது பிள்ளையாய் வாழுவோம். மட்டுமல்ல மத்.6:33ல் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்.

**துன்மார்க்கரின் தீமைகளை விட நீதிமான்களின் தவறுகளே பெருந்தீமையை உண்டாக்கும்**

அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும்.

**IIஅவரதுபிள்ளைகளை பாதுகாப்பதில் அல்லது அவரது பிள்ளைகளுக்கு விரோதமாக வரும் சத்துருக்களை மடங்கடிப்பதில் கரிசனை உள்ளவர்.**

பாதுகாப்பு என்று சொல்லும் போது பலவகையான காரியங்களில் நமக்கு பாதுகாப்பு கொடுப்பதில் கரிசனை உள்ளவர்.

1சாமுவேல் 15:2ல் **சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இஸ்ரவேலர் எகிப்தில் இருந்து வந்தபோது அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன்.**

**ஆண்டவர் மனதில் வைத்து செயல்படும் காரியங்களில் ஒன்று அவரது பிள்ளைகளுக்கு இடையூறு விளைவிக்கும் யாராக இருந்தாலும், எவராக இருந்தாலும் அவைகளை மனதில் வைத்து அவர்களை மடங்கடிப்பதில் கரிசனை உள்ளவராயிருக்கிறார். யாத்.17:8ல் அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணினார்கள்.**

ஆண்டவரால் வழிநடத்தி கொண்டு வந்த இஸ்ரவேல் ஜனங்களை அமலேக்கியர்கள் குறுக்கீடு செய்தார்கள். அவரது பிள்ளைகளின் வாழ்வில் இடையூறு விளைவிக்கிற அமலேக்கியர்களை அழித்துப்போட சாமுவேல் தீர்க்கத்தரிசியின் நாட்களில் இஸ்ரவேலின் ராஜாவாக செயல்பட வைத்த சவுலின் மூலம் அழிக்க கட்டளைக் கொடுக்கப்படுகிறது.

1 சாமு 15:3 இப்போது நீ போய் அமலேக்கை மடங்கடித்து அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன் மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையுமம், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக்கடவாய் என்கிறார் என்று சொன்னான்.

மேற்கூறப்பட்ட வசனங்களை



தியானித்தால் ஆண்டவருடைய பிள்ளைகள் என்கிற நிச்சயத்தோடு வாழும் பிள்ளைக்கு விரோதமாக நேரிடையாகவோ, மறைமுகமாகவோ செயல்படுகிற எவராக இருந்தாலும் அவர்களை என் ஆண்டவர் மனதில் வைத்து மடங்கடிக்கிறவர் என்பதை நினைவில் கொண்டு தைரியங்கொள்ளவும் அவரையே சார்ந்து கொள்ளவும் முடியுமே.

அதுமட்டுமல்ல மொர்தெகாய்க்கு விரோதமாக எத்தனையோ சதித்திட்டங்களை ஆமான் செயல்படுத்தின பொழுதிலும் ஜெயிக்க முடியாமல் போனதற்கு இதுவே காரணம்.

**"கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக செயல்படும் யாரையும் ஆண்டவர் மடங்கடிப்பதிலும் பாதுகாப்பதிலும் கரிசனை உள்ளவர்"**

**IIIஆண்டவர் அவரது பிள்ளைகளை வியாதிகளிடமிருந்தும் பாதுகாப்பதில் கரிசனை உள்ளவர்**

அவர் வசனங்களை அனுப்பி குணமாக்குகிறவர் பரி.பவுலுக்கு முள்(வியாதி) கொடுக்கப்பட்டிருந்தாலும் அது அவரது ஊழியத்திற்கு இடையூறாக இல்லையே, அவரது கிருபை அவரை நன்றாக தாங்கியதே. எவ்வளவு பெலவீனங்கள் இருந்தாலும் ஆண்டவர் அவரது பிள்ளைகளைத் தாங்குவதில், தப்புவிப்பதில், விடுவிப்பதில் கரிசனை உள்ளவர்.

**IVஆண்டவர் அவரது பிள்ளைகளை சாத்தானின் பிடியிலிருந்தும் பாதுகாக்கிறார்**

கோலியாத் என்கிற சாத்தானின் பிடியில் இருந்து இஸ்ரவேல் ஜனங்கள் காக்கப்பட்டார்கள்

லூக்.13:11 தனது சரீர பெலவீனத்திலும் ஜெப ஆலயத்தில் சென்று ஆண்டவருடைய போதனையைக் கேட்ட 18 ஆண்டுகளாய் பெலவீனப்படுத்தும் ஆவியை உடைய பெண் கூனியாய்

**தேவன் பெயரில் உள்ள விசுவாசம் இல்லாமையால் ஏற்படும் இழப்புகளுக்கு எதனையும் ஈடாக்க முடியாது.**

இருந்தாலும் நிமிர முடியாத அவளது கூனை நிமிரவைத்து சுகமாய் அனுப்பினவர் இயேசு அல்லவா. எனவே அவரது பிள்ளைகளுக்கு விரோதமாய் இருக்கும் பிசாசின் கட்டுகளை உடைத்து அவர்களை விடுதலையாக்குகிறவர் நமது கரிசனை உள்ள ஆண்டவரே.

**Vஆண்டவர் அவரது பிள்ளைகளை பழக்குவிப்பதில் கரிசனை உள்ளவர்** நியா.3:2

"**இஸ்ரவேல் புத்திரரின் சந்ததியாரும் அதற்கு முன் யுத்தஞ் செய்ய அறியாதிருந்தவர்களும் அவைகளை அறியும்படி ஒவ்வொரு வகையான வேலைகளை கற்றுக் கொடுப்பதற்கும்**" பல Training Centre உண்டு. ராணுவத்திற்கு பயிற்சி, மலையேற பயிற்சி, விண்வெளி செல்ல பயிற்சி, ஆசிரியர் பயிற்சி என்று பாடங்களையும், செயல்முறை தேர்வுகளையும் வைத்து பயிற்சி அளிப்பார்கள்.

ஆனால் ஆவிக்குரிய வாழ்வில் பாடங்களை அல்லது வேதங்களை கற்றுக் கொடுக்க பல இறையியல்

கல்லூரி இருந்தாலும் செய்முறை பயிற்சியை ஆண்டவரால் மட்டுமே பழக்குவிக்க முடியும்.

ஆண்டவர் ஒருவனை ஜெபிக்க பழக்குவிக்காவிட்டால் யாராலும் சரியாக பழக்குவிக்க முடியாது.

பாடுகளிலும் கிறிஸ்துவை சரியாக சார்ந்து கொள்ள நாம் அவரால் மட்டுமே பழக்குவிக்க முடியும்.

ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்ட சீஷர்கள் பல வகைகளில் பழக்குவிக்கப்பட்டார்கள்.

கானாவூர் கலியாண வீட்டில் ஏற்பட்ட குறைவு யோவான் 2:11b அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

**பலவகையான பாடுகளும் நெருக்கங்களும் நம்மை ஆவிக்குரிய காரியங்களை கற்றுக் கொள்ளச் செய்கிறது.**

சங்.119:71ல் தாவீது உபத்திரவங்களால் ஆண்டவரின் பிரமாணங்களைக் கற்றுக் கொள்வதாக கூறுகிறார்.

எனது வாழ்வில் நான் இறைபணி செய்வதற்கு என்னை பல வகைகளில் ஆண்டவர் பழக்குவித்து வருகிறார்.

**வேத வசனம் மற்றவர்களுக்கு பிரசங்கிப்பதற்காக என்பதல்ல நாம் அனுபவித்து அல்லது அதால் பழக்குவிக்கப்பட்டு மற்றவர்களுக்கு கூறுவது எத்தனை மேன்மையான காரியம்.**

ரோமர் 2:21 இப்படி இருக்க மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவு செய்யக் கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா?

**தேவனுடைய ஆசீர்வாதத்தில் சாபங்களுக்கு இடமில்லை**

**ஆண்டவரால் பழக்கு விக்கப்பட்டால் மட்டுமே பிரசங்கம் வேறு வாழ்வு வேறு என்று இல்லாமல் இருக்கும்,**

மற்றபடி அனைத்து செய்திகளும் உலகத்திற்கு ஒத்துப்போகிற காரியமாகத் தான் இருக்கும். அப்படியென்றால் ஆண்டவரால் பழக்குவிக்கப்பட ஆண்டவர் கரிசனை உள்ளவராய் இருக்கிறார்.

## VI ஆண்டவர் அவரது பிள்ளைகளை கண்காணிப்பதில் கரிசனை உள்ளவர்.

சாதாரணப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது எவ்வளவு கண்காணிப்பு உள்ளவர்கள் என்பதை தெரிந்து இருக்கலாம். கூட்டமான இடங்களில் பிள்ளைகளை அழைத்து செல்லும் போது நமது கண்கள் பிள்ளைகளையே கண்காணித்துக் கொண்டு இருக்கும்.

பிள்ளைகள் படிக்கும் போது நன்றாக அல்லது கவனமாக படிக்கிறார்களா என்றும் கண்காணிப்போம். இணைய தளத்தை பிள்ளைகள் பார்வையிடும் போதும் நாம் அவர்களை கண்காணிப்பதுண்டு.

வெளியூரில் தங்கி பிள்ளைகள் படிக்கும் போது அவர்களை மறைவாக கண்காணிக்கிறப் பெற்றோர்களும் உண்டு.

அதைப்போல ஆண்டவரும் அதைவிட மேலாக அவரது பிள்ளைகளைக் கண்காணிக்கிறார்.

ஆதி.22:1–2 இந்த காரியங்கள் நடந்தபின்பு தேவன் ஆபிரகாமை சோதித்தார்.

ஆதி.22:12 அப்பொழுது அவர் பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே. அவனுக்கு ஒன்றும் செய்யாதே. நீ அவனை



உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்த படியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்.

ஆதியாகமம் 12:1 மற்றும் 12:4ல் புறப்பட்டு போ என்று சொன்னவுடனே புறப்பட்டுப் போனவர் ஆபிரகாம் இதே ஆபிரகாம் உயர்வு வந்தபின்பும், குழந்தை பெற்ற பின்பும் அதே கீழ்ப்படிதல் இருக்கிறதா என்று ஆண்டவர் சோதித்தார்.

**எல்லா நாட்களும் அவருடைய வார்த்தைக்கு இணங்கி நடப்பதைத் தவிர வேறு எதையும் ஆண்டவர் எதிர்ப்பார்ப்பதில்லை.**

IIநாளா.16ம் அதிகாரத்தில் ஆசா என்ற ராஜா ஆரம்பத்தில் ஆண்டவரை சார்ந்து வெற்றி கண்டவன். இவ்வதிகாரத்தில் ஆண்டவரை சார்ந்து கொள்ளவில்லை. IIநாளா.16:12b ஆசா தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல பரிகாரிகளையே தேடினான்.

IIநாளா32:31ல் ஆகிலும் பாபிலோன் பிரபுக்களின் ஸ்தானாபதிகள் தேசத்திலே நடந்த அற்புதத்தைக் கேட்க அவனிடத்துக்கு அனுப்பப்பட்ட விஷயத்தில் அவன் இருதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி அவனைச் சோதிக்கிறதற்காக தேவன் அவனைக் கைவிட்டார்.

சோதித்தல்

**பிறர் அபிப்பிராயத்திற்கு மட்டும் இடமளிப்பவர் பிறருக்கு அடிமையாகவே இருப்பவர்.**

என்கிறபதம் முக்கியமானது. ஒரு காலத்தில் வியாதியில் இருந்தவன் இந்த எசேக்கியா. ஆண்டவரை தேடினதினால் ஆயுசு நாட்கள் 15 ஆண்டுகள் கூட கொடுக்கப்பட்டிருந்தது. அதன்பின் நன்கு அவனை உயர்த்தினார். உயர்வான நிலையில் இருக்கும் போது உயர்த்தின ஆண்டவருக்கு மகிமை சேர்க்காமல் உயர்த்தின தேவனுக்கு நன்றி உணர்வோடு செயல்படாமல் தன்னிடத்தில் வந்த பாபிலோன் பிரபுக்களின் ஸ்தானாபதிகளிடத்தில் ஆண்டவரை உயர்த்திக் கூறாமல் தனது செல்வத்தையும், தனது உயர்வையும் உயர்த்திக் காட்டினான்.

IIநாளா32:25ல் எசேக்கியா தனக்கு செய்யப்பட்ட உபகாரத்திற்குத் தக்கதாய் நடவாமல் மனமேட்டிமையானான்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே நமது தேவன் கரிசனை உள்ளவர். எனவே நம்மை கண்காணிக்கிறார் என்கிற உணர்வோடு ஆதியில் ஆண்டவரிடத்தில் கொண்டிருந்த அன்பை, விசுவாசத்தை காத்து நடப்போம்.

ஆண்டவர் அவரது பிள்ளைகளைப் பராமரிப்பதில் கரிசனை உள்ளவர். அவரது பிள்ளைகளை பாதுகாப்பதில் கரிசனை உள்ளவர். அவரது பிள்ளைகளை பழக்குவிப்பதில் கரிசனை உள்ள ஆண்டவர். அவரது பிள்ளைகளை கண்காணிப்பததில் கரிசனை உள்ள ஆண்டவர் என்பதை தெரிந்து கொண்ட நாம் அவரது பிள்ளையாய் இருக்கிறோமா என்று நம்மை நாமே சோதித்தறிவோம்.

1. நீங்கள் கிறிஸ்தவர்களாய் இருக்கலாம் எனினும் ஆண்டவரது பிள்ளையாய் இருக்கிறீர்களா?
2. நீங்கள் அநேக ஊழியத்தை

தாங்குகிறவர்களாய் இருக்கலாம். எனினும் ஆண்டவருடைய பிள்ளை என்கிற நிச்சயம் உண்டா?

3. அநேக மனமாற்றமில்லா ஊழியர்கள் உங்களைத் தேடி வந்து உங்களது ஆசீர்வாதங்களையும், உங்களுக்கு வரக்கூடிய உயர்வையும் குறித்து பேசி உங்களிடத்தில் பல ஆயிரங்களை பெற்றுச் சென்றாலும் உங்களுக்கு ஆண்டவரது பிள்ளை என்கிற எண்ணம் உண்டா?

4. சபை பொறுப்பில் இருக்கலாம் போதகர் அல்லது பேராயருக்கு ஆலோசனை கூறுகிறவர்களாகக் கூட இருக்கலாம் எனினும் ஆண்டவரது பிள்ளை என்கிற முழுமையான நம்பிக்கை உண்டா?

5. பலவகையான தவறுகள் செய்தும் நான் ஆண்டவரை நேசிக்கிறேன் அல்லது அவர் என்னை நேசிக்கிறார் என்ற எண்ணம் இருந்தாலும் ஆண்டவருடைய பிள்ளை என்கிற எண்ணமுண்டா?

**நான் ஆண்டவரின் பிள்ளை என்கிற நிச்சயம் எனக்கு இல்லை அல்லது தெரியவில்லை என்று கூறினால் அல்லது நினைத்தால் ஆண்டவரது உண்மையானக் கிருபையைப் பெற்றுக் கொள்ள முடியாது.**

சோதனையும் பாடுகளும் வரும்போது தேவனுக்குப் பிரியமான ஏதோ ஒன்று நம்மிலிருக்கிறது என்பது நிரூபணமாகிவிடும்.

யோவான் 1:12 அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

இயேசுவை முழுமையாக விசுவாசித்து அவரை தனது சொந்த இரட்சகராக ஏற்று கொள்பவர்கள். இயேசு ஒருவரே எனது பாவத்திற்காக கல்வாரியிலே தன்னை பலியாக ஒப்புக்கொடுத்து என்னை மீட்டவர் என்று யாரெல்லாம் முழு நிச்சயமாய் நம்புகிறார்களோ அத்தனை பேர்களும் அவருடைய பிள்ளைகளே.

நீங்கள் அவருடைய பிள்ளைகளாய் இருந்தால் இவ்வுலகில் யாருக்கும், எவருக்கும், எவைக்கும் அடிமையில்லாமல் வாழுவீர்கள்.

ஊழியர்களும் அடிமைப்படுத்த முடியாது. உலக மனிதர்களும் உங்களை அடிமைப்படுத்த முடியாது.

இப்படி அடிமையில்லாமல் தேவனுடைய பிள்ளைகளாய் வாழும்போது தேவாதி தேவனின் முழுமையான கரிசனை நமக்கு உண்டு.

ஆண்டவரின் கரிசனைக்கு நாம் ஆளாவோம். ஆண்டவரின் முழுமையான ஆளுகைக்கு உட்படுவோம். ஆண்டவரின் உண்மையான ஆசீர்வாதத்தைப் பெற்று மகிழ்வோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

**அநேகர் தங்களது துயரங்களைப் பொறுத்துக் கொண்டாலும் மற்றவர்களின் இன்பத்தையோ, உயர்வையோ பொறுத்துக் கொள்ள முடியாமலிருக்கிறார்கள்.**



# பிரசங்க குறிப்பு



## 'தேவனை அறிந்தும் தேவ தண்டனைக்கு ஆளானவர்கள்'

### I மிரியாம்

எண் 12:10 – மேகம் கூடாரத்தை விட்டு நீங்கிப் போயிற்று மிரியாம் உறைந்த மழையின் வெண்மை போன்று குஷ்டரோகியானாள்

மிரியாம் – மோசேயின் உடன்பிறந்த சகோதரி ஆண்டவரை அறிந்தவள்

எண்.12:2 தங்களைக் கொண்டும் ஆண்டவர் பேசினதாக கூறியவர்கள் எனினும் குஷ்டம் ஏன்?

a)மோசேயின் மனைவியினிமித்தம் மோசேக்கு விரோதமாக பேசினதினால்
b) சகோதரனின் மனைவியின் மீது ஏற்பட்ட பொறாமை
c) மெய்யான ஊழியருக்கு விரோதமாய் பேசினதினால்

### II கேயாசி

IIஇரா.5:22ல் எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி, குஷ்டரோகத்தில் இருந்து சுகம்பெற்ற நாகமானிடத்தில் எந்த காணிக்கையையும் பெற்றுக்கொள்ள விரும்பாத நமது எஜமானாகிய எலிசாவுக்கு தெரியாமல் வந்து பொய் சொல்லி வெள்ளியையும், மாற்று வஸ்திரங்களையும் கேட்டுப் பெற்றுக் கொள்கிறான். இது தேவனது பார்வைக்கு அருவருப்பான ஒன்றாக இருந்தது.

இந்த கேயாசி

தேவ ஊழியனாகிய எலிசாவின் வேலைக்காரன்
தேவனை அறிந்தவன்
தேவ வல்லமையையும் அறிந்தவன்
எனினும் குஷ்டம் ஏன்?

a) இறைபணியை பணத்திற்காக செய்தான் (பொருளாசை)
b) தனது மனசாட்சியை மழுக்கினான்
c) தவறான முறையில் ஆசீர்வாதங்களுக்கு இடம் கொடுப்பது தெய்வ தண்டனையை கொண்டு வரும்

**"தனது ஊழியத்தால் சுகம் பெற்ற நாகமானிடத்தில் எந்த காணிக்கையையும் ஏற்றுக் கொள்ளாததுபோல இப்போது இப்படிப்பட்ட நல்ல எண்ணம் கொண்ட ஊழியர்கள் எழும்புவது நல்லது" இது கர்த்தருக்கு உகந்தது.**

ஊழியத்தை கர்த்தர் கொடுத்தால் தேவைகளை அவர் சந்திப்பார்.

### III உசியா ராஜா

IIநாளா26:21 உசியா ராஜாவுக்கு குஷ்டம் வந்தது. IIநாளா26:5 ஆண்டவரை அறிந்தவன் ஆண்டவரை நோக்கி ஜெபிக்கிறவன் நாளா26:6-15 ஆண்டவரால் உயர்வு பெற்றவன் எனினும் குஷ்டம் ஏன்?

a) IIநாளா 26:16 மனமேட்டிமை
b) IIநாளா.26:18 அதிகார துர்பிரயோகம்
c) தனக்கு நியமிக்கப்பட்ட பாதையில் செல்லாதது

நாமும் ஆண்டவரை அறிந்தும் தேவ தண்டனை பெறாதபடி நம்மை காத்துக் கொள்வோம்.

# மகிழ்ச்சியான குடும்பம்



சகோ.J.**மெல்கிசேதேக்**, மூன்றடைப்பு

குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி என்பது மிக மிக முக்கியமானது. குடும்ப வாழ்வில் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டுமெனில் ஒருவருக்கொருவர் உண்மையாய் இருங்கள், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுங்கள், கணவன் மனைவிக்கிடையில் வேறு யாரும் முக்கியத்துவம் இல்லாதவராய் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கடந்த வெளியீடுகளில் தெளிவாக அறிந்தோம்.

இந்த இதழில் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்.

அன்பு என்பது மிக மிக முக்கியமானது. உங்களது மகிழ்ச்சிக்கு காரணம் என்ன என்று அநேக வயோதிப தம்பதியரிடம் கேள்விக் கேட்டப்போது அவர்கள் கூறின பதில்கள் முதலாவது ஆண்டவரை நேசிக்கிறேன் அதன்பின் எனது மனைவி அல்லது கணவரை நேசிக்கிறேன் என்பது தான்.

கணவன் மனைவிக்குள் அன்பு என்று ஒன்று வந்துவிட்டால் எந்த குறைகளும் கண்களுக்குத் தெரியாது.

இன்று அநேகக் குடும்பங்களில் மெய்யான அன்பு இருப்பதில்லை. கணவன் மீது சரியான அன்பு இல்லாத மனைவிமார் அவரது சம்பாத்தியத்தைதான் குறி வைத்து கொண்டு இருக்கின்றனர்.

மனைவி மீது சரியான அன்பு இல்லாத கணவன்மார் மனைவி மூலம் வரும் இன்பத்தை மட்டுமே குறியாக கொண்டுள்ளனர். அதுவும் மனைவி குடும்பத்தினரிடமிருந்து எதையாவது அபகரிக்கலாமா என்கிற சிந்தையில் உள்ளனர்.

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால்

1. 1கொரி.13:4ன் படி தன்னை பற்றியே புகழாமல் இருப்பீர்கள் என் குடும்பம் என் உடன்பிறப்பு என் வீட்டு வசதி எங்கள் வீட்டு செழிப்பு என்று தனது குடும்பத்தையே பற்றி புகழ்ந்து பேச மாட்டீர்கள்.
2. 1கொரி.13:4ன் படி இறுமாப்பு உங்களுக்கு வராது. அவன் வரட்டும் அவள் பேசட்டும் என்று உங்களுக்குள் Ego பிரச்சனை வருவதில்லை.
3. வீணான வைராக்கியம் உங்களுக்கு வருவதில்லை
4. சிறிய விஷயங்களையும் பெரிது படுத்தி பேச மாட்டீர்கள்.
5. ஒருவருக்கொருவர் குறைகூற மாட்டீர்கள்.



6. ஒருவருக்கொருவர் துரோகம் செய்கிற எண்ணம் வரவே வராது
7. இவர்தான் எனது கணவர் இவள்தான் எனது மனைவி என்ற எண்ணத்தில் உறுதியாக இருப்பீர்கள்.
8. ஒருவருடைய குறைகளை (மற்ற) 3வது நபர்களிடம் கூறமாட்டீர்கள்
9. மற்றவர்களோடு நேரம் செலவழிக்கிற நேரத்தைக் காட்டிலும் மனைவியோடு அல்லது கணவனோடு பேசி மகிழ்வதில் தீவிரம் காட்டுவீர்கள்.
10. எவ்வளவு பெரிய ஊழியம் செய்து கொண்டு இருந்தாலும் எவ்வளவு வருமானம் உள்ள வேலை எனக்கு இருந்தாலும் குடும்பத்தோடு நேரம் செலவழிக்க தவற மாட்டீர்கள்.

**அன்பு என்பது ஒரே நாளில் வருவதில்லை. இதற்கு தேவ கிருபை வேண்டும். இப்படிப்பட்ட அன்பு உங்களுக்குள் வர இருவரும் சேர்ந்து ஜெபிக்கும் நேரம் அதிகரிக்க வேண்டும். கர்த்தர் நடத்துவார் என்கிற விசுவாசம் வர்த்திக்கப்பட வேண்டும். இயேசு நம்மை நேசிக்கிறார் என்ற உணர்வோடு ஒருவருக்கொருவர் நேசியுங்கள்.**

**கையில் காசு இல்லாவிட்டாலும், குறைந்த வருமானமே உங்களுக்கு இருந்தாலும், அடிப்படை வசதியற்ற முறையில் வாழ்ந்து வந்தாலும் ஒருவரில் ஒருவர் உண்மையான அன்பு இருந்தால் மெய் மகிழ்ச்சியாகவே இருக்கும்.**

மெய் அன்பு இல்லாததால் தான் வசதியான குடும்பங்களிலும் பிரிவினை வருகிறது. உண்மையாக நேசிக்கிற உள்ளம் இல்லாதவர்கள் எவ்வளவு படித்திருந்தாலும் மன வேதனையுடனும், பிரிவுடனும் வாழ்வர்,

எனவே ஒருவரிலொருவர் மெய்யான அன்பை வெளிப்படுத்துங்கள். குடும்ப வாழ்வில் மெய் மகிழ்ச்சியை அனுபவியுங்கள்.




**Global Action International University, U.S.A** மூலமாக கிடைக்கப்பெற்ற **கௌரவ டாக்டர் பட்டத்திற்காக** தேவனைத் துதிக்கிறேன்.

சிறுவர் பகுதி

**திருமதி. Y.ஜோசப்பின் பாக்கியராஜ், பழனியப்பபுரம்**

# உள்ளத்தில் பிறந்த இயேசு

அழகிய வானில் வண்ண வண்ண பறவைகள் சிறகடித்து பறப்பது போல, வீடுகள் தோறும் வண்ண வண்ண சீரியல் பல்புகள், (Stars), குடில் அலங்காரம், கிறிஸ்மஸ் கீத பவனி, (Christmas carol round) என்றெல்லாம் குதுகலத்துடனும் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியோடு கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை சுவிசேஷமாக அறிவித்து கொண்டாடி வருகிற குட்டீஸ் உங்கள் அனைவருக்கும் அக்காவின் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

"பிறந்தாரே பிறந்தாரே பாலன் இயேசு பிறந்தாரே"... என விசில் அடித்து பாடிக் கொண்டே சென்ற மோகனின் எண்ணெயில்லா தலை, கிழிந்த ஆடை, போன்றவற்றைப் பார்த்த கிறிஸ்டியான் ஆச்சரியத்தில் மோகன்....மோகன் என்று பாசக்குரலில் சத்தத்தோடு கூப்பிட்டான். கூப்பிடும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த மோகனின் கண்கள் கிறிஸ்டியானின் சோகம் நிறைந்த முகத்தைப் பார்த்தன. டேய் கிறிஸ்டியான் எப்படிடா இருக்க? உன்ன பார்த்து ரொம்ப நாளாச்சுடா. நீ மும்பையில பெரிய கம்பெனி ஒன்றில் மேனேஜரா (Manager) இருக்கிறன்னு கேள்விப்பட்டேன். ரொம்ப சந்தோஷம்டா. அப்புறம் என்னடா முகத்தில் சின்ன கவலை தெரிஞ்சமாதிரி இருக்குன்னு மோகன் கிறிஸ்டியானிடம் கேட்டான். டேய் மோகன் நீ என்னோட வீட்டுக்கு இப்போ வர முடியுமாடா? இல்லன்னா வேற ஏதாவது வேலை இருக்கா என்று கிறிஸ்டியான் கேட்டு முடிப்பதற்குள் உன்னோட வீட்டுக்கு வருவதை விட என்னடா பெரிய வேலையிருக்கு என்று சொல்லிக் கொண்டே கிறிஸ்டியானின் கைகளை பிடித்து கோர்த்த வண்ணம் தெருவில் நடந்து சென்றனர். தெரு முழுவதும் வண்ண வண்ண சீரியல்கள் கண்ணுக்கு விருந்தளிக்கும் ஸ்டாரின் அலங்காரங்கள், அலங்கரிக்கப்பட்டு கோலாகலமாக இருப்பதை இருவரின் கண்களும் ரசிக்க, மோகன் "பிறந்தாரே பிறந்தாரே" என சந்தோஷத்துடன் வாய்க்குள் இப்பாடலைப் பாட மோகன் நீ எப்படி இவ்வளவு சந்தோஷமாயிருக்கிற, உன்னிடம் உணவு உண்ண, ஆடை வாங்க கூட காசில்லாமல் கிழிந்த ஆடை அணிந்திருக்கிற இந்த நிலையில் எப்படி இவ்வளவு சந்தோஷமா பாடல்பாடி துதிக்க முடியுது. என்னமோ தெரியல எங்கிட்ட எல்லா வசதிகளும், ஆடம்பரங்களும் இருந்தாலும் என்னோட இருதயத்தில சந்தோஷமும் சமாதானமும் இல்லடா. நானும் உன்ன மாதிரி சந்தோஷமா இருக்கனும்னு விரும்புகிறேன். சொல்லுடா நான் என்ன செய்யனும் சொல்லுடா ப்ளீஸ் என்று கிறிஸ்ட்டியான் கேட்டான். ஒன்னுமில்லடா, வெரி சிம்பிள் தாண்டா. உன்ன தாயின் கருவில் உருவாகுமுன்னே தெரிந்து கொண்டிருக்கிற தேவாதி தேவனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு உன் உள்ளத்தில் பிறக்க இடம் கொடு. அவரிடம் நீ விரும்பும் எல்லா சந்தோஷமும் மகிழ்ச்சியும் நிறைவான நித்திய வாழ்வும் பெற்றிடலாம். நீ இயேசுவை விசுவாசித்து உன் பாவங்களை அறிக்கையிட்டு விட்டு விட அவரிடம் பெலன் கேட்டு பெற்றுக் கொள். இயேசு உன்னில் பிறக்க ஆசைப்படு. அவரும் உன்னோடே கூட இருக்க ஆசையாயிருக்கிறார் என்று மோகன் கூறினான். சரிடா இப்போ சந்தோஷமா இருக்கு. கிறிஸ்து என் உள்ளத்தில் பிறக்க நீ ஒரு நட்சத்திரம் (Star) போல வழிகாட்டி-யிருக்கிற மோகன் ரொம்ப நன்றிடா. உனக்கு நான் கிறிஸ்மஸ்க்கு புத்தாடை பரிசுகள் வாங்கி வந்திருக்கேன். வாங்கிக் கொள் என்று அன்புடன் கூறிய கிறிஸ்டியானின் கைகள் "WISH YOU A MERRY CHRISTMAS AND HAPPY NEW YEAR" என்று மோகனின் கைகளை குலுக்கி வாழ்த்து தெரிவித்தது. இருவரும் சந்தோஷத்துடன் தங்கள் உள்ளத்தில் பிறந்த இயேசுவை அறியாத மக்களுக்கு அறிவிக்க புறப்பட்டனர்

**தோல்வி வந்தால் அது உனக்கு மிகப் பிரியமானது போல் காட்டிக் கொள். வெற்றியடைந்தால் அது உனக்கு மிகப் பழக்கப்பட்டது போல் காட்டிக் கொள்.**
**-ஹிட்ச்சாக்**

### கருத்து வசனம்

அவர் (இயேசு) தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். மத் 1:21 (பி)

### ஜெபம்

அன்புள்ள இயேசு கிறிஸ்துவே, இந்த கிறிஸ்மஸ் தினத்தை ஆசரிக்கப் போகிற எனக்குள் நீர் வாரும். என் உள்ளத்தை, நீர் பிறக்க தருகிறேன். அப்பா உம்முடைய கைகளில் என்னைக் கொடுக்கிறேன். நீர் உம்முடைய இரத்தத்தால் என்னைக் கழுவி என்னை இரட்சியும். என்னை அநேகருக்கு ஆசீர்வாதமாய் பயன்படுத்தும். மீட்பர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே வேண்டிக்கொள்கிறேன் பிதாவே ஆமென்.

கடவுள் மனிதனைப் படைத்தபோது தேவசாயலாக அவனைப் படைத்தார். ஆனால் கடவுள் மனிதனை மீட்க முற்பட்டபோதோ தன்னையே மனிதனாக வலிய தாழ்த்திக் கொண்டார்.
-ஜான் பாய்ஸ்

**கடவுள் மனிதனாக வெளிப்பட்டதை சில மனிதர்கள் தங்கள் மூளை அறிவால் கிரகிக்க முடியாமல் தடுமாடுகிறார்கள். அவர்களது பார்வையில் எப்படி ஒரு வட்டம் சதுரமாக மாறக்கூடும் என்ற கேள்வி போன்றதொரு குதர்க்கம் எழும்புகிறது. கடவுள் மனிதனை மீட்க முற்பட்டது விளக்கத்தில் அல்ல. வியப்பிலே இருக்கிறது. -ரேல்ஃப் மார்ட்டின்**

# யார் துன்மார்க்கன்

1. ஏசா 3:11 – துன்மார்க்கனுக்கு ஐயோ! அவனுக்குக் கேடு உண்டாகும்; அவன் கைகளின் பலன் அவனுக்குக் கிடைக்கும்
2. யோபு 21:30 – துன்மார்க்கன் ஆபத்து நாளுக்கென்று வைக்கப்படுகிறான்; அவன் கோபாக்கினையின் நாளுக்கென்று கொண்டு வரப்படுகிறான்.
3. சங்.10:2 துன்மார்க்கன் தன் பெருமையினால் சிறுமைப்பட்டவனைக் கடூரமாய்த் துன்பப்படுத்துகிறான்; அவர்கள் நினைத்த சதிமோசங்களில் அவர்களே அகப்படுவார்கள்.
4. சங்.10:3–துன்மார்க்கன் தன் உள்ளம் இச்சித்ததைப் பெற்றதினால் பெருமைபாராட்டி, பொருளை அபகரித்துத் தன்னைத்தான் போற்றி கர்த்தரை அசட்டை பண்ணுகிறான்.
5. சங்.10:4 – துன்மார்க்கன் தன் கர்வத்தினால் தேவனைத் தேடான்; அவன் நினைவுகள் எல்லாம் தேவன் இல்லை என்பதே
6. சங்.10:5 – துன்மார்க்கன் தன் எதிராளிகளெல்லார் மேலும் சீறுகிறான்.
7. சங்.10:6 – துன்மார்க்கன் நான் அசைக்கப்படுவதில்லை, தலைமுறை தலைமுறைதோறும் தீங்கு என்னை அணுகுவதில்லையென்று தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்.

## துன்மார்க்கனின் அழிவு

8. சங்கீதம் 37:10–இன்னுங் கொஞ்ச நேரந்தான். அப்போது துன்மார்க்கன் இரான், அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை.
9. சங்.37:21– துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற் போகிறான்.
10. நீதி.10:24 – துன்மார்க்கன் பயப்படும் காரியம் அவனுக்கு வந்து நேரிடும்
11. நீதி.17:23 – துன்மார்க்கன் நீதியின் வழியைப் புரட்ட, மடியிலுள்ள பரிதானத்தை வாங்குகிறான்.
12. நீதி.12:26 – துன்மார்க்கருடைய வழியோ அவர்களை மோசப்படுத்தும்.
13. நீதி.14:32 – துன்மார்க்கன் தன் தீமையிலே வாரிக்கொள்ளப்படுவான்
14. நீதி.15:6– துன்மார்க்கனுடைய வருமானத்திலோ துன்பமுண்டு
15. நீதி.24:20 – துன்மார்க்கனுக்கு நல்ல, முடிவு இல்லை; துன்மார்க்கனுடைய விளக்கு அணைந்து போம்.



16. ஏசா 48:22, ஏசா.57:21 – துன்மார்க்கனுக்குச் சமாதானம் இல்லையென்று தேவன் சொல்லுகிறார்.

## துன்மார்க்கனுக்கும் வாழ்வு உண்டு

17. ஏசா.55:7 துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன் மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக் கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்.



18. எசே.18:21 துன்மார்க்கன் தான் செய்த எல்லாப் பாவங்களையும் விட்டுத் திரும்பி என் கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டு, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை
19. எசே.18:23 – துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
20. எசே.18:27 துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தை விட்டு விலகி நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப் பண்ணுவான்.

மேற்கண்ட வசனங்களில் இருந்து யார் துன்மார்க்கன், அவனுக்குரிய சாபம் அவன் எப்படி பிழைக்க முடியும் என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இதை வாசித்து நமது செயல்பாட்டை சரிசெய்து கொள்ள கர்த்தர் உதவி செய்வாராக.




2014ம் ஆண்டு கர்த்தரையே முழுமையாக நம்புகிற அனைவருக்கும் ஆசீர்வாதமான ஆண்டாகவே இருக்கும். உங்களனைவருக்கும் வார்த்தையே வாழ்வு ஊழியக்குடும்பத்தின் மூலம் எங்கள் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

# தாழ்மையின் சின்னங்கள்

**திருமதி.ஜேஸ்மின் சுந்தரராஜன்**

**தாழ்மை**



பெருமையுள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கிறார்

தாழ்மையுள்ளவர்களுக்கோ கர்த்தர் கிருபை அளிக்கிறார்

உலகம் அதிகமும் விரும்பாதப் பண்பு, கிறிஸ்தவ வாழ்விலோ அடிப்படையானப் பண்பு. பெருமைகள் உலக சமூகத்தில் பெரியவை, தேவ சமூகத்திலோ அவை சீரழிக்கும் சிறுமைகள்.

தாழ்மை என்பது தாழ்வு மனப்பான்மை அல்ல. அது எவரையும் தளர்ச்சியடையச் செய்யாது. கிறிஸ்தவ தலைமைத்துவச் சிகரங்களாக விளங்கியவர்களெல்லாரும் தாழ்மையின் உறைவிடங்களாக விளங்கினர். தாழ்மை பெலவீனம் அல்ல, கிறிஸ்தவ வாழ்வின் பெலன். தாழ்மைக்கு எளிமை அடையாளமாகலாம். ஆனால் எளிமை அடையாளங்களெல்லாம் தாழ்மையின் அடையாளம் எனக்கூறமுடியாது.

பெருமைப் பித்துபிடித்தோரும், எளிமையின் கபட (ஏமாற்றுகிற) வேடத்தில் நடப்பதை நாம் காண்கிறோம். தாழ்மை என்பது நமது உண்மையான அணுகுமுறையில் விளங்கும் அது வேடத்தை விரும்பாது. தேவசமூகத்தில் தனது ஏதுமில்லாமையை அப்பட்டமாக ஒப்புக்கொள்ளும். தேவ கிருபையை முற்றும் பற்றிக் கொண்டதால் உலகில் எதனைப் பற்றியும் மேன்பாராட்டாது. தேவகிருபை பெற்றதையே பாக்கியமாகக் கூறும். சுயத்தில் திருப்திபடாத அந்தத் தாழ்மை எப்போதும் தேவக் கிருபையின் வாசலில் தவம் கிடக்கும். தாழ்மையுள்ள மனிதனுக்கு வீழ்ச்சியைப் பற்றிய பயமில்லை. தரையில் இருப்பவர் உயரத்தில் இருந்து வீழ்வதைப் பற்றி எதற்காகக் கவலைப்பட வேண்டும்? தாழ்மை பிறரிடம் கற்றுக் கொள்ள அதிகம் இருப்பதை அறிந்திருக்கும். தம்மிடம் ஏதுமிருப்பதாக அகங்காரம் கொள்ளாது. இந்த உன்னத தாழ்மையை ஆவியானவர் தாமே நம்மில் உருவாக்க முடியும். ஆவியின் கனியாக அது விளங்கும்.

ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையுமம் அதின ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். கலாத்தியர் 5:22–26

1. **தேவ வசனத்திலிருந்து கற்றுக் கொண்டால்...**
2. **கிறிஸ்துவை முன் மாதிரியாக கொண்டால்...**
3. **நமது ஏதுமில்லாமையை உணர்ந்து இருந்தால்....**
4. **நம்மை இயல்பானவர்களாக காட்டி கொண்டால்...**
5. **கிறிஸ்துவில் சிறுபிள்ளைகளாக மாறினால்...**

இயல்பாகவே இப்பண்பு நம்மில் கனிந்து நிற்கும். தாழ்மை நாம் அணிய வேண்டிய ஆபரணம், விட்டுவிடக் கூடாத பொக்கிஷமுமாம்.







# சுமக்கிற தேவன்

**சகோ.R.சுந்தரராஜன், ஆழ்வாநேரி**

தாயின் வயிற்றில் தோன்றினது முதல் நம்மை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் நம்மைத் தாங்கி நமது முதிர்வயது வரைக்கும் தாங்குகிற, ஏந்துகிற, சுமக்கிற, தப்புவிக்கிற தேவனின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

## சுமக்கிற தேவன்



உபாகமம் 1:31 இவ்வாறாக கூறுகிறது. **"ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்து கொண்டு போவது போல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிற வரைக்கும், நடந்து வந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்து கொண்டு வந்ததைக் கண்டீர்களே"**

ஒரு மனிதன் தன் பிள்ளையை எப்போதெல்லாம் சுமப்பான் என்று நாம் சற்று யோசித்துப் பார்த்தோமானால் கீழ்க்கண்ட காரியங்களை நாம் ஆராயலாம்.

1.தன் பிள்ளையின் மீது அதிக அன்பு செலுத்தும் போது அல்லது அக்குழந்தையை கொஞ்சும் போது அக்குழந்தையை தூக்கி வைத்து கொஞ்சுவான். அதைப் போல நம் தேவனும் நம்மைத் தூக்கி வைத்து கொஞ்சும் தேவனாக இருக்கிறார்.

2. தன் பிள்ளை சுகவீனமாக இருக்கும்போது அதைத் தூக்கி வைத்து அதை ஆறுதல் படுத்துகிறவனாக காணப்படுவான். அதைப் போலவே நம் தேவனும் நமது பெலவீன நேரங்களில் நம்மைப் பெலப்படுத்தி ஆறுதல் படுத்துகிற தேவனாக இருக்கிறார்.

3. ஆபத்துகள், விபத்துகள் போன்றவற்றிலிருந்து பாதுகாக்க தகப்பன் தன் பிள்ளையை தூக்கிக் கொண்டு செல்வதை நாம் காணலாம். அது போலவே நம்மைப் பாதுகாக்கிற தேவனாயிருக்கிறார். இன்னும் நாம் சொல்லிக்கொண்டே போகலாம். நம்மிடம் அன்பு செலுத்தி, ஆறுதல்படுத்தி, பாதுகாக்கிற தேவன் நம்மைத் தகப்பனைப் போல சுமந்து வருகிறதை நாம் அறியலாம்.

உபாகமம் 32:11,12ல் "கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின் மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளை தன் செட்டைகளின் மேல் சுமந்து கொண்டு போகிறது போல, கர்த்தர் ஒருவரே அவனை வழி நடத்தினார்".

தன் குஞ்சுகளுக்காக கூட்டைக் கட்டியது இந்த தாய்க் கழுகுதான். வசனம் சொல்கிறது கழுகு தன் கூட்டைக் கலைத்தது என்று. அப்பொழுது அந்தக் குஞ்சுகள் கூட நினைத்திருக்கும் அம்மாவுக்கு என்ன ஆச்சு? ஒரு வேளை வேத வசனம் அந்தக் குஞ்சுகளுக்கு தெரிந்திருந்தால் இவ்வாறாக வசனத்தைக் கொண்டே

தாயிடம் பேசியிருக்கும். புத்தியுள்ள ஸ்திரீயோ வீட்டைக் கட்டுகிறாள். புத்தியில்லாத ஸ்திரீயோ வீட்டை இடித்துப் போடுகிறாள். இந்தத் தாய் கழுகுக்கு புத்தி பிசகி விட்டதோ என்று நினைத்திருக்கும். ஏனென்றால் கூட்டைக் கலைக்கும் போது கூட்டில் உள்ள கம்புகள், குச்சிகள் அந்தக் கழுகு குஞ்சுகளை குத்துமாம். அவைகள் வலி தாங்க முடியாமல் கூட்டை விட்டு பறக்க எத்தனிக்கும். சிறகுகளை சட சட வென்று அடிக்க ஆரம்பிக்கும். ஒரு வித பயம் கலந்த உணர்வோடு பறந்து தரையில் விழுந்து விடுவோம் என்று எண்ணும்போது தானே, இந்தத் தாய்க்கழுகு தன் செட்டைகளை விரித்து அதன்மேல் சுமந்து கொள்ளுமாம். குஞ்சுப் பறவைகளை பழக்குவிக்கிறதற்காக இவ்வாறு தாய்க்கழுகு செய்தது என்று பிறகுதான் புரிந்து கொள்ளும். அதைப் போலவே தேவனும் சில சமயங்களில் நமக்கு வேதனை தோன்றுவது போல் சம்பவங்களை அனுமதித்தாலும் அவைகள் எல்லாம் நம்மைப் பழக்குவிப்பதற்காகத்தானே தவிர வேறு எதற்கும் இல்லை. கழுகைப்போல் சுமக்கிற தேவன் இருக்கும் போது நமக்கு ஏன் பயம்? ஏசாயா 40:11, "**மேய்ப்பனைப் போல தமது மந்தையை மேய்ப்பார். ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து கறவலாடுகளை மெதுவாய் நடத்துகிறார்**".

ஒரு மேய்ப்பனுக்குத் தான் தெரியும். தன்னுடைய மந்தையிலுள்ள ஆடுகளைப் பற்றி, அவைகளின் தேவைகளைப் பற்றி எந்த ஆடுகளை எவ்வாறு நடத்த வேண்டும் என்று முற்றிலும் அறிந்தவன் அந்த மேய்ப்பன். குட்டி ஆடுகளை சுமந்து செல்லும் அந்த மேய்ப்பன், நல்ல மேய்ப்பன், நானே நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான் என்று நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்தும் கூறினாரல்லவா. ஓநாய்களிடம் இருந்து காப்பாற்றும் நல்ல மேய்ப்பன் நம் ஆண்டவர். தாவீது தன் அனுபவத்திலே ஒரு விசை கரடியிடமிருந்தும் மற்றொருவிசை சிங்கத்திடமிருந்து தன் ஆடுகளைக் காப்பாற்றியதாக கூறுகிறான் அல்லவா. கர்த்தரை மேய்ப்பராகக் கொண்டு அவர் மீதுள்ள விசுவாசத்தினால் அல்லவா எழுந்தது இந்த 23ம் சங்கீதம் கர்த்தர் நம் மேய்ப்பர் என்றால் நாம் ஆடுகளாக இருக்கும் போது மட்டுமே. இந்த உண்மையை மறந்துவிடக்கூடாது. நாம் ஆடுகளாக இருக்கும் போது அவர் நம்மை சுமந்து, பாதுகாத்து, போஷிக்கிறார் *நம் ஆண்டவர் நல்ல மேய்ப்பர் (யோவான் 10:11,14) *நம் ஆண்டவர் பெரிய மேய்ப்பர் (எபிரேயர் 13:20)

*நம் ஆண்டவர் பிரதான மேய்ப்பர் (1பேதுரு 5:4).

தமது மடியிலே சுமந்து, வழிநடத்தும் நல்ல மேய்பருக்கு நாம் அனுதினமும் நன்றி சொல்லுவோம்.

## சுமந்த கிறிஸ்து

1, மத்.8:17 – "அவர் (இயேசு) தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்"

2. 1யோவான் 3:5 – "அவர் (இயேசு) நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள். அவரிடத்தில் பாவமில்லை"

3. ஏசா 53:4 – "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்





கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார்"

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (யோ.1:29) என்று யோவான் ஸ்நானகன் இயேசுவைக் குறித்து சொன்ன சாட்சி தான் இது. மானிடனாகப் பிறந்த ஒவ்வொருவருடைய பாவத்தையும் அவர் சிலுவையிலே சுமந்து தீர்த்தார். இரட்சிப்புண்டாக்கும் வழியை இதன் மூலம் உருவாக்கினார்.

நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று கூறின நல்ல தேவனல்லவா நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து.

மெய்யாகவே, அவர் நம்முடைய பாடுகளை, துக்கங்களை, பெலவீனங்களை, பாவ நோய்களை, அக்கிரமங்களை சுமந்து விட்டதால் நாம் விசுவாசத்தோடு நாம் அவருடைய பிள்ளை என்ற உரிமையோடு மேற்கண்ட காரியங்களில் இருந்து விடுதலை பெற்று ஒரு வெற்றி வாழ்க்கை வாழ அழைக்கப்படுகிறோம். நம் ஆண்டவர் சிலுவையை சுமந்ததன் மூலம் கிடைக்கப்பெற்ற காரியங்கள் அல்லவா.

"குதூகலம் கொண்டாட்டமே
என் இயேசுவின் சந்நிதானத்தில்
ஆனந்தம் ஆனந்தமே
என் அன்பரின் திருப்பாதத்தில்
பாவமெல்லாம் பறந்தது
நோய்களெல்லாம் தீர்ந்தது
இயேசுவின் இரத்தத்தினால்
கிறிஸ்துவுக்குள் வாழ்வு
கிருபையால் மீட்பு
பரிசுத்த ஆவியினால்"

மேற்கண்ட பாடலின் அர்த்தத்தை உணர்ந்து நாம் இப்பொழுது பாட முடியும்.

## நாம் சுமக்க வேண்டியது

லூக்கா 14:27 இவ்வாறாக கூறுகிறது, "தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்." நாம் அவருக்கு சீஷனாக இருக்க வேண்டும் என்றால் நம்முடைய சுயத்திற்கு "இல்லை" என்றும் சிலுவைக்கு "ஆம்" என்றும் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். முதலில் கர்த்தருக்குக் கொடுக்க வேண்டிய மகிமையை அவருக்குக் கொடுக்க வேண்டும். அதன் பின்னர் தான் மற்ற காரியங்கள் எல்லாம். இவ்வாறு செய்தால் நம்முடைய காரியங்கள் எல்லாம் மகிமையாக இருக்கும்.

2. 1 கொரிந்தியர் 4:10 இவ்வாறாக கூறுகிறது. "கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனம் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்."

புதிய உடன்படிக்கையின் படி சபைக்கு நியமிக்கப்பட்ட இரண்டு சாக்கிரமந்துகள் உண்டு.

a) திருமுழுக்கு
b) திருவிருந்து

திருமுழுக்கு பழைய மனிதனை அடக்கம் செய்து விட்டு, ஒரு புதிய மனிதனை பெறுவதற்கான அடையாளமாக எடுக்கப்படுகிறது.



அதாவது கிறிஸ்துவின் மரணத்திற்கு ஒப்பாக நாம் நம்முடைய பழைய மனிதனை அடக்கம் செய்துவிட்டு, கிறிஸ்து உயிர்த்து எழுந்ததற்கு ஒப்பனையாக நம்முடைய புதிய மனிதன் அமைகிறது.

ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின என்னும் வசனத்திற்கிணங்க நாம் வாழ அழைக்கப்படுகிறோம். நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்து வெளிப்பட வேண்டும்.

இரண்டாவது, திருவிருந்து எடுக்கும் பொழுது, அதாவது அப்பம் பிட்கும் போது கிறிஸ்துவின் சரீரம் பிட்கப்பட்டடதை நினைவு கூறுகிறோம். ரசம் அவருடைய இரத்தத்திற்கு ஒப்பாக அமைகிறது. அவர் நமக்காக சிந்திய ரத்தத்தை நாம் நினைவு கூறுகிறோம். திருவிருந்திலே நாம் அவருடைய மரணத்தை நினைவு கூறுகிறோம். திருவிருந்து எடுக்கும் போது மாத்திரமல்ல, மற்ற நேரங்களிலும் அவர் நமக்காக மரித்தார் என்ற எண்ணம் இருந்தால் தவறு செய்யுமுன் யோசிப்போம். தவறு செய்ய துணிய மாட்டோம், திருவிருந்து எடுப்பதின் நோக்கமும் அதுதான்.



3. கலா.6:2 ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும், நற்செயல்கள் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறான். நம்மைச் சுற்றிலும் எத்தனையோ, எளியவர்கள், ஏழைகள், அனாதைகள், வறியவர்கள், வறுமையில் உழலுபவர்கள் உண்டு. முடிந்தவரை நாம் அவர்களுக்கு உதவுவோம். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் என்று வாசிக்கிறோம் அல்லவா. இந்தச் சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று நம் ஆண்டவர் கூறுகிறார் அல்லவா. இப்படிச் செய்வதால் நாம் அவருடைய பிரமாணத்தை நிறைவேற்றுபவர்களாக காணப்படுவோம். மற்றவர்களுக்கு உப்பாக, ஒளியாக விளங்குவோம். பலவீனருடைய பலவீனங்களை நாம் தாங்குவோம். இதன் மூலம் கர்த்தர் மகிமைப்படுவார்.

கிறிஸ்துவுக்குள் வருவது வேறு,
வாழ்வது வேறு
வளர்வது வேறு
மாறுவது வேறு

கிறிஸ்துவைப் போல மாற வேண்டும். கிறிஸ்து நம்மைக் குறித்து சாட்சி கூற வேண்டும். இப்பேர்ப்பட்ட சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்வோமா? என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு. அவர் தரும் பெலத்தினால் நாம் மற்றவர்களின் பாரத்தை சுமப்போம். ஆமென்.





– P. மிகாவேல், பணகுடி

# கனோன் ஆர்தர் மர்காஷியஸ்

தூத்துக்குடி திருமண்டலத்தின் பேராலயம் (Cathedral church) என்ற சிறப்பு நாசரேத்தில் அமைந்துள்ள ஆலயத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தை கட்டி எழுப்பியவர் நாசரேத்தின் தந்தை என்று போற்றி மதிக்கப்படும் கனோன் ஆர்தர் மர்காஷியஸ் என்ற தேவ மனிதன் ஆவார்.

இங்கிலாந்து நாட்டில் லெமிங்டன் என்ற கிராமத்தில் தமது பெற்றோருக்கு எட்டாவது மகனாக பிறந்தார். 17வது வயதில் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டார். ஆனால் நோயின் பாதிப்பிலும் சோர்ந்து போகாமல் மிஷனரி ஊழியத்திற்கு அர்ப்பணித்தார். எனவே மிஷனரியாக பணிபுரிய குருத்துவ படிப்பினை முடித்தார். பின்னர் மருத்துவத்திலும் அறுவை சிகிச்சையிலும் கல்வி பயின்று சிறந்த அறிவைப் பெற்றார்.

1875 ஆம் ஆண்டில் விடுமுறைக்காக இங்கிலாந்திற்கு சென்றிருந்த இடையன்குடியில் பணியாற்றி வந்த கால்டுவெல் அவர்கள் கல்லூரி ஒன்றில் பிரசங்கம் செய்த போது அதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஆர்தர் மர்காஷியஸ் இந்தியாவிற்கு மிஷனரியாக வருவதற்கு அர்ப்பணித்தார்.

13.11.1875ல் கனம் கால்டுவெல் அவர்களுடன் இடையன்குடிக்கு சென்று ஓராண்டு ஊழியத்திற்கான பயிற்சி பெற்றார். பின்னர் கால்டுவெல் ஐயா அவர்கள் பரிந்துரையின் பெயரில் 1.12.1876ல் மிஷனரி பணி செய்ய நாசரேத்தில் குடியேறினார். அப்போது அவருக்கு வயது 24.

நாசரேத்தை சுற்றியிருந்த அனைத்து கிராம மக்களையும் குதிரையில் சவாரி செய்து சந்தித்து சுவிசேஷ செய்தியினை அறிவித்தார். அதன் மூலம் ஏராளமாக மக்கள் இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களானார்கள்.

1878 ஆம் ஆண்டில் நாசரேத்தில் கைத்தொழில் பாடசாலையினை ஆரம்பித்தார். நாசரேத்திலிருந்த ஆலயத்தை விரிவுபடுத்தி 1884 ஆம் ஆண்டில் பிரதிஷ்டை செய்தார்.

1902ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட காலரா வியாதிக்கு ஏராளமான மக்கள் பலியானார்கள். மர்காஷியஸ் அவர்கள் காலராவினால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து மருத்துவ உதவிகள் செய்தார். தினமும் அதிகாலையில் நற்கருணை ஆராதனையை நடத்தினார். காலரா வியாதி நின்றது. மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

மக்களை நேசித்து வியாதிகள் மத்தியிலும் பாடுகள் நேரங்களிலும் மக்களோடு சேர்ந்து மக்கள் நலனுக்காக உழைத்து இயேசுகிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தின உன்னதமான ஊழியர் ஆர்தர் மர்காஷியஸ் அவர்கள் 27.4.1908அன்று தமது 56வது வயதில் பரலோக ராஜ்யத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டார். அவரது உடல் நாசரேத்தில் ஆலய வளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்துவுக்காகவே வாழ்ந்து மரித்த கனோன் ஆர்தர் மர்காஷியஸ் அவர்களை நினைவு கூர்ந்து தேவனுக்கு மகிமை செலுத்துவோம். அல்லேலூயா

# ஜாக்கிரதையாய் இருங்கள்

1. கர்த்தர் சொன்னார், கர்த்தர் காட்டினார் என்று கூறும் செய்தியாளர்கள் அல்லது ஊழியர்களுக்கு ஜாக்கிரதையாய் இருங்கள்.

**மாற்கு 1:4,5ல் யோவான்ஸ்நானகனின் செய்தியில் இப்படிப்பட்ட தவறான செய்திகள் இல்லை. ஆனால் ஜனங்கள் பாவங்களை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள்.**

2. எங்களது கூட்டத்திற்கு வந்தால் உங்களுக்கு ஆசீர்வாதம் உண்டு, விடுதலை உண்டு, சாபங்கள் மாறும், வியாதிகள் மறையும் என்று விளம்பரப்படுத்தும் ஊழியர்களுக்கு ஜாக்கிரதையாய் இருங்கள்.

**மெய்யான விடுதலை என்பது மனமாற்றமே**

3. இந்த ஆண்டு எப்படி இருக்கும் என்று விளம்பரப்படுத்தும் தீர்க்கதரிசன செய்தி என்று கூறிக்கொள்ளும் ஊழியர்களுக்கு ஜாக்கிரதையாய் இருங்கள்.

**வேதவசனங்களுக்கு கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதம் கீழ்ப்படியாவிட்டால் சாபம் என்று வேதம் தெளிவாக கூறுகிறதே.**

4. நாங்கள் மிஷினரிகளை தாங்குகிறோம். நாங்கள் ஏழைகளை ஆதரிக்கிறோம். நாங்கள் இப்படிப்பட்ட ஊழியங்களையெல்லாம் செய்கிறோம். எனவே அதை தாங்குவோரின் எண்ணிக்கை இத்தனை தேவை என்று கூறும் ஊழியர்களுக்கு ஜாக்கிரதையாய் இருங்கள்.

**கிறிஸ்துவை அடையாளம் காட்டுவதை தவிர வேறு எதுவும் சிறப்பான பணி கிடையாது. கிறிஸ்துவை புரிந்து கொண்டால் நாமாகவே மிஷினரியை நேரிடையாக தாங்குவோம். நாமாகவே நேரிடையாக ஏழைகளுக்கு இரங்குவோம்.**

5. ஆண்டவரை ஏற்றுக் கொள்ளாமல், மெய்யான மனமாற்றம் இல்லாமல் இவர்களது ஊழியத்திற்கு காணிக்கை கொடுத்தேன் ஆண்டவர் என்னை இவ்வளவாய் ஆசீர்வதித்தார் என்று சாட்சி கூறவைக்கும் கூடுகை நடத்திடும் ஊழியர்களுக்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

**மனமாற்றமில்லாமல் கொடுக்கப்படும் காணிக்கை அருவருப்பானதே மத்.23:19**



6. காணிக்கை கொடுப்பதினால் வரும் ஆசீர்வாதங்கள் என்ன என்கிற செய்தியை அடிக்கடி பிரசங்கிக்கும் ஊழியர்களுக்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

**மெய் மனமாற்றம் ஒருமனிதனுக்குள் வந்தால் ஆத்துமாவுக்காக செலவு பண்ணவும் செலவு பண்ணப்படவும் ஆயத்தமாயிருப்பான்.**

7. நீங்கள் வசதியானவர்களாய் இருப்பீர்களானால் அல்லது நல்ல தொழில் அதிபராய் இருப்பீர்களானால் அல்லது நல்ல அதிகாரமுள்ள உயர்பதவியில் இருப்பீர்களானால் உங்களோடு அடிக்கடி தொடர்பு கொண்டு பேசும் ஊழியர்களுக்கு ஜாக்கிரதையாய் இருங்கள். உங்களோடு தானாக தொடர்பு கொள்கிற அவர்கள் சமுதாயத்தில் வெறுக்கப்பட்ட ஏழையாய் இருக்கிறவர்களை தொடர்பு கொள்ள விரும்பவே மாட்டார்கள். ஏனெனில் உங்களது உதவி அவர்களுக்கு தேவை. எனவே கர்த்தரின் ஊழியம் என்று நீங்கள் ஏமாறாமல் ஜாக்கிரதையாய் இருங்கள்.

8. இஸ்ரவேல் தேசத்திற்கு புனித பயணம் என்று கூறி உங்களை உற்சாகப்படுத்தும் ஊழியர்களுக்கு ஜாக்கிரதையாய் இருங்கள். சுற்றுலாவாக செல்வது தவறல்ல. ஆனால் புனித பயணமாக மேற்கொள்வது தவறு.

**கண்டு விசுவாசிப்பவனை விட காணாமல் விசுவாசிப்பவன் பாக்கியவான்**

9. ஒரு செய்தியை கேட்டு கிறிஸ்துவின் பின்னாக செல்லாமல் செய்தியை கூறும் ஊழியனின் பின்னாகச் செல்ல அழைக்கும் ஊழியர்களுக்கு ஜாக்கிரதையாக இருங்கள்.

**சாத்தானின் பிடியில் இருந்து ஒருவனை விடுவிப்பது எளிதானது. ஆனால் ஊழியனின் பிடியில் சிக்கி இருக்கும் மனிதனை விடுவிப்பது கடினமானது என்று பல பரிசுத்தவான்கள் அதாவது வேத வசனத்தை கலப்படமில்லாமல் கூறும் ஊழியர்கள் கூறுவதை கேட்டு இருக்கிறேன்.**

10. வேத வசனங்களுக்கு கீழ்ப்படிய வலியுறுத்தாமல் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார், கர்த்தர் உங்களை உயர்த்துவார், கர்த்தர் உங்களை ஆறுதல் படுத்துவார், கர்த்தர் உங்களை விடுப்பார் என்று கூறிவரும் ஊழியர்களுக்கு ஜாக்கிரதையாய் இருங்கள்.

**வேதவசனத்தின் மூலம் வரும் சகல ஆசீர்வாதங்களும் வேதவசனங்களுக்கு கீழ்ப்படிவதினாலேயே உண்டாகும்.**

## சில மனிதரிடமிருந்து சில பாடங்கள்

நாளாகம நூலில் வரும் ஒவ்வொரு மனிதர் வாழ்விலும் ஒவ்வொரு பாடம் உண்டு. நமக்கு மிகவும் பழக்கமான சில மனிதர்களின் வாழ்வுப் பாடங்களை ஒவ்வொரு வரிகளிலும் தொட்டுக்காட்டலாம்.

| பெயர் | சிந்தனை |
|---|---|
| 1. ஆதாம் | பாவத்தின் பின் விளைவுகள் நாம் நினைப்பதிலும் அதிகம். ஆதி.2,3 (நாளா1:1) |
| 2. நோவா | தேவனுக்குக் கீழ்ப்படியும்போது பெரும் ஆசீர்வாதம் காத்து நிற்கும். (நாளா.1:4) ஆதி.6–9 |
| 3. ஆபிரகாம் | விசுவாசமே ஒரு மனிதனைத் தேவ பார்வையில் நீதிமானாக நிற்கச் செய்யும். ஆதி.11:26–25:10 |
| 4. ஈசாக்கு | சமாதானம் தேடுவோரைக் கனம் சூழ்ந்து கொள்ளும். ஆதி.21:35 (நாளா 1:28) |
| 5. ஏசா | பானையை உடைத்தால் வேறு வாங்கலாம் வாழ்வை உடைத்தால்? (நாளா.1:35) ஆதி.25:20–36;43 |
| 6. அமலேக்கு | தீய மனிதர்கள் தேவமக்களைத் துன்புறுத்தவே காத்திருப்பர். (நாளா 1:36) யாத்.17:8–16 |
| 7. யாக்கோபு | பாவங்கள் வேட்டையாடினாலும், தேவனைப் பார்ப்போர் வாழ்வை (நாளா.2:1) இழப்பதில்லை. ஆதி.25:20–50:13 |
| 8. யூதா | தீமையால் வரும் பயங்களைப் போல பயங்களால் வரும் (நாளா 2:3) தீமைகளும் அதிகம். ஆதி.37:50 |
| 9. தாமார் | தேவன் மனித வீழ்ச்சிகளிலும் சிற்பங்களை உருவாக்கிக் (நாளா2:4) கொண்டிருக்கிறார். ஆதி.38 |
| 10. பேரேஸ் | பெரிய தடைகள் நடுவில் தேவன் ஒரு உடைப்பை உருவாக்குவார். (நாளா.2:5) ஆதி.38:27–30 |
| 11. போவாஸ் | இரக்கம் காட்டுவோர் இறைவனின் திட்டத்தின் இதய பகுதியில் (நாளா 2:12) இடம் பெறுவர். ரூத் நூல் |
| 12. ஈசாய் | இன்றைய பிள்ளைகள் தான் நாளைய சாதனையாளர்கள் என்பதை (நாளா2:13) எண்ணாமல் இருக்கக்கூடாது. 1சாமுவேல் 16 |
| 13. தாவீது | வாழ்வில் பெருமை என்பது தேவனுக்கான ஓர் இதயமுடன் (நாளா 2:15) வாழ்வது தான். I, II சாமுவேல் நூல்கள் |
| 14. யோவாப் | பதவி வெறி பிடித்தோர் இழப்புக்களுடன் இறப்பை அடைவர். (நாளா 2:16) IIசாமு.2:13–Iஇரா.2:34 |
| 15. அம்னோன் | கண்ணில்லா காதல் உயிரையும், ஆத்துமாவையும் கெடுக்கும் (நாளா 3:1) IIசாமு13 |
| 16. அப்சலோம் | அவசியமின்றி ஆசைப்படுவோர், அதற்கான போராட்டத்திலேயே (நாளா.3:2) அழிவை அடைவர். IIசாமு.13–18 |
| 17. அதோனியா | நமது தகுதிகளுக்கேற்ப செயல்படுவதே தேவ சித்தப்படியான வாழ்வு (நாளா.3:2) Iஇரா.1–2 |
| 18. பத்சேபாள் | வீழ்ச்சிகளையும் கூட மன்னிப்பால் புதிய அத்தியாயங்களாக மாற்ற (நாளா.3:5) தேவனால் முடியும். IIசாமு.11:12, Iஇரா.1:2 |
| 19. சாலொமோன் | தேவனற்ற மனித ஞானம் முட்டாளாகச் செயல்பட வைக்கும். (நாளா3:5) Iஇரா.1–11 |
| 20. ரெகொபெயாம் | பொறுப்பற்ற, பக்குவமற்ற, தெய்வ பயமற்றவர்களின் ஆலோசனையைக் (நாளா.3:10) கேட்டதால் இராஜ்யமே இரண்டாகப் பிரிந்தது. Iஇராஜா.12:1–14 |



## நமது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்




**திசையன்விளை JTK TV யில்**
ஞாயிறு தோறும்
இரவு 9.00–9.30 வரை

STN

**நாகர்கோவில் REM TV யில்**
செவ்வாய் தோறும்
இரவு 9.00–9.30 வரை

**கன்னியாகுமரி REM TV**
தொலைக்காட்சியில் நமது செய்திகள்
தினமும்
இரவு 9.00 முதல் 9.30 வரை

**கூடலூர் LIVING JESUS**
தொலைக்காட்சியில் நமது செய்திகள்
தினமும் இரவு 8.00 முதல் 8.30 வரை

**திருநெல்வேலி JTK TV**
தொலைக்காட்சியில் நமது செய்திகள்
புதன் இரவு 9.00 முதல் 9.30 வரை

### இமயம் T.V. யில்

**வெள்ளிதோறும்**
**அதிகாலை**
**5.30 – 5.45 வரை**
**காணத்தவறாதீர்கள்**

**குன்னூரில் LIVING JESUS**
தொலைக்காட்சியில் நமது செய்திகள்

ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி – காலை 6.00 - 6.30
செவ்வாய், வியாழன் – இரவு 8.00 - 8.30

**மேற்கண்ட இடங்களில் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்து பயனடையுங்கள்**


### தொடர்பு முகவரி



04635-257230



9443614676
9597771585
9442157230

Website :
www.wordislife.org
www.wordislife.in
E-mail :
melchijohn@gmail.com
melchi9160@hotmail.com